# புதிய நிர்வாகத்தின் கீழ் உள்ள செலான் வங்கி 2008 ஆம் ஆண்டிற்கான தமது நிதி அறிக்கையினை வெளியிட்டுள்ளது

செலான் வங்கி, எதிர்பாராத சந்தை நிலவரங்களை ஏற்படுத்திய ஊகிக்க முடியாத மாறுதன்மை கொண்ட வட்டி விகிதங்கள் மற்றும் பொருளியல் மாற்றங்கள் ஏற்பட்ட 2008 ஆம் ஆண்டிற்கான தமது நிதி அறிக்கையினை வெளியிட்டுள்ளது. எவ்வாறாயினும் வங்கி முன்னர் எப்போதும் இல்லாதவாறு அதிக தேறிய வட்டி வருமானமாக ரூ. 7.215 பில்லியனை ஈட்டியுள்ளது. இது கடந்த ஆண்டு ஈட்டிய ரூ. 6.784 பில்லியனை விட அதிகமாகும். வெளிநாட்டு நாணயமாற்று வருமானம் மற்றும் ஏனைய வட்டியல்லாத வருமானமானது 28.5% அதிகரிப்பை கொண்டுள்ளன. இப்பிரிவின் கீழ் கடந்த ஆண்டு பெற்ற வருமானம் ரூ. 2.473 பில்லியகான இருந்த போதிலும் இவ்வாண்டில் பெற்றுள்ள வருமானம் ரூ. 3.056 பில்லியன் ஆகும். 2008 டிசெம்பர் முதல் நிலவும் சந்தை நிலவரத்தின்படி வங்கியானது தமது கடன்கள், முற்பணங்கள் மற்றும் ஏனைய முதலீடுகள் உட்பட தமது மொத்த முதலீடுகளையும் உயரிய முறையில் பேணி ஐந்தொகையினை புதிய நிர்வாகத்தின் கீழ் மேலும் செம்மையாக்கி பலப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட செய்முறைகளுக்கு அமைய வங்கியானது, முதலீடுகள் மற்றும் தமது கடன் வழங்கல்களில் ஏற்படும் வீழ்ச்சிக்கு சர்வதேச கணக்கியல் தரநியமங்களுக்கு அமைய மற்றும் மத்திய வங்கியின் வரையறைகளுக்கமைய முன்னேற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இதன் காரணமாக கணக்காய்வு செய்யப்படாத நிதிக்கூற்றில் வரிக்கு பிந்திய இலாபம் ரூ 37.9 பில்லியன் ஆகும்.

AAA தரச்சிறப்பை பெற்ற தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் பொதுமுகாமையாளர்.'.நிறைவேற்று அதிகாரியும், செலான் வங்கியின் புதிய தலைவருமான திரு ஈஸ்ட்மன் நாரென்கொட அவர்கள் செலான் வங்கியானது அண்மையில் நியமிக்கப்பட்ட நிபுணத்துவமிக்க பணிப்பாளர் சபையின் வழிகாட்டலில் புதிய திசையில் பயணிப்பதை உறுதி செய்தார்.

சவால்மிக்க இத்தருணத்திற்கு முகங்கொடுக்க கீழ்வரும் விடயங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

1. வெளிநாட்டு நிபுணர்களுடன் அண்மையில் மேற்கொண்ட பயிற்சிப்பட்டறைக்கமைய புதிய இடர் முகாமைத்துவத்தை ஏற்படுத்தல்.
2. வங்கி நடைமுறை மற்றும் செயற்பாடுகளின் மீள்பொறிமுறைக்குட் படுத்தப்படவுள்ளன.

3. ஒழுங்கு முறைமை வேண்டுகோள்கள் மற்றும் இலங்கை கணக்கியல் நியமங்கள் உட்பட ஏனைய சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளுக்கு தீவிர ஆதரவு.
4. புதிய இணை கடன் வழங்கல் குழுவினை நியமனம் செய்து பிரதிநிதிகள் அதிகாரங்களை மீள்பாவை செய்து வங்கியின் கடன் வழங்கல், மேற்பார்வை மற்றும் மீள்பெற்றுக் கொள்ளல் செய்முறைகளை பலப்படுத்தல்.
5. தேவையற்ற இலாபமற்ற செலவினங்களை தவிர்த்தல்.
6. நட்டமடைந்துள்ள அனைத்து வர்த்தகங்களையும் மற்றும் துறைகளையும் நிறுத்தல்.
7. வங்கியின் கட்டமைப்பினை மேலும் சீராக்க துறைசார்ந்த நிபுணர்களின் வழிகாட்டலை பெற்றுக் கொள்ளல்
8. வங்கியின் மற்றும் வங்கியுடனான தமது உரிமை, பொறுப்பு மற்றும் புரிந்துணர்வு பற்றி ஊழியர்களுக்கு விளக்கங்களை வழங்கி அவர்களை விழிப்பூட்டல்.

மேற்கூறிய விடயங்களை செயற்படுத்தவும் அதன் பலன்களை காணவும் சில காலம் செல்லும். உள்நாட்டு வங்கிகளுக்கு மத்தியில் எமது வங்கியினை முதல்தர இடத்திற்கு கொண்டு செல்லக் கூடிய நிபுணத்துவம், அர்ப்பணிப்பு மற்றும் ஆற்றல் மிக்க ஊழியர்கள் எம்மிடம் உள்ளனர் என நாம் உறுதியாக நம்புகின்றோம்.

இலங்கை மத்திய வங்கியின் தொடர்ச்சியான மேற்பார்வை மற்றும் இலங்கையின் மிகப்பெரிய வர்த்தக வங்கியான இலங்கை வங்கி நிர்வாகத்தின் பங்களிப்பு காரணமாக வங்கியின் எதிர்காலம் சிறப்பானதாக அமையும் என்பதில் வங்கியின் தலைவர் திரு. ஈஸ்ட்மன் நாரென்கொட மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளார்.